Life of Christ
Tamil



# கிறிஸ்துவின் ஜீவியத்தில் முக்கியமானவை

## 4 இயேசு மன்னிப்பதைக் கற்பித்தமை

- ஓர் தகப்பன் தன் குமாரனை மன்னிக்கிறார்
- நாம் மன்னிக்க வேண்டும்
- இயேசு பாவிகளை மன்னிக்கிறார்

## ஓர் தகப்பன் தன் குமாரனை மன்னிக்கிறார்.

### இயேசு கூறிய ஓர் கதை

இயேசு பல முறை உவமைகள் என்று சொல்லப் படும் சிறு கதைகளை ஆவிக்குரிய சத்தியங்களை கற்பிக்கும் பொருட்டு சொன்னார்.

ஒரு மனிதனுக்கு இரண்டு புத்திரர் இருந்தனர். அவர்களுள் இளையவன் தன் தகப்பனை நோக்கி தகப்பனே, "ஆஸ்தியில் எனது பங்கை எனக்குத்தர வேண்டும்," என்றான். அதற்குத் தகப்பன் தனக்குரிய ஆஸ்தியை அவர்கள் இருவருக்கும் பிரித்துக் கொடுத்தான். சில நாட்களுள் இளைய குமாரன் தனது ஆஸ்தியை விற்று பணமாகத்திரட்டிக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டான். அவன் தூர தேசத்திற்குச் சென்று துஷ்ட ஜீவியத்தின் மூலம் தனது பணத்தை எல்லாம் செலவழித்தான். அப்பொழுது அத்தேசத்தில் கொடிய பஞ்சமுண்டாயிற்று. அவன் கையில் ஒன்றுமிருக்கவில்லை.

தன்னிடத்தில் ஒன்றுமற்ற நிலையில் அவன் அத்தேசத்திலுள்ள ஓர் குடியானவனின் பன்றிகளை மேய்க்குந் தொழிலை ஏற்றுக்கொண்டான். அவன் தனது வயிற்றைப் பன்றிகளின் தீனினால் நிரப்பிக்கொள்ள ஆசையாயிருந்தும், அது அவனுக்குக் கொடுக்கப்படவில்லை. அவன் அப்பொழுது தன்னிலையை உணர்ந்து, "எனது தகப்பன் வீட்டில் வேலையாட்களுக்கு தேவைக்கதிகமான உணவுண்டே, இங்கே நானோ பட்டினியினால் வாடுகிறேன்" என்றான். நான் எழுந்து என் தகப்பனிடம் சென்று தகப்பனே, உமக்கு விரோதமாகவும், தேவனுக்கு விரோதமாகவும் நான் பாவம் செய்தேன். இனிமேல் உமது குமாரன் என்றழைக்கப்படுவதற்கு நான் பாத்திரனல்ல உம்முடைய வேலையாட்களில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்ளும் என்பேன்," என்றான். அவன் எழுந்து தன் தகப்பன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

அவன் தன் தகப்பன் வீட்டிற்கு வெகு தூரத்திலிருக்கும் பொழுதே அவனுடைய தகப்பன் அவனுக்காகக் காத்திருந்தவனாய், மகிழ்ந்து அவனை நோக்கி ஓடி வந்து அவனைக் கட்டி முத்தமிட்டான். குமாரன் இவனை நோக்கி, "தகப்பனே, நான் உமக்கு விரோதமாகவும், தேவனுக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன். இனிமேல் உமது குமாரன் என்றழைக்கப்படுவதற்கு நான் பாத்திரனல்ல." என்றான், ஆனால் அவன் தகப்பனோ தன் வேலையாட்களை அழைத்து "இவனுக்கு நல்ல உடைகளை உடுத்

© 1983. All Rights Reserved
International Correspondence Institute
Brussels, Belgium
D/1985/2145/15

துங்கள். அவன் விரலுக்கு மோதிரம் இட்டு பாதரட்சையை அணியுங்கள். கொழுத்த கன்றொன்றை அடித்து, விருந்து பண்ணுவோம். ஏனெனில் எனது குமாரன் மரித்தான். மீண்டும் உயிர்த்தெழுந்தான், காணாமற் போனான், மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டான்,'' என்றான். அப்படியே விருந்து கொண்டாடப் பட்டது,

இவ்வேளையில் மூத்த குமாரன் வயலிலிருந்தான் அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாக வருகிற போது, வீட்டில் நடைபெற்ற நடன சங்கீத சத்தங்களைக் கேட்டு ஓர் வேலைக்காரனை அழைத்து என்ன நடைபெறுகின்றது என்று சேட்டான். அதற்கு வேலைக்காரன் உமது சகோதரன் சுகமாக வீடு திரும்பினார், அவரை பெற்றுக்கொண்ட சந்தோஷத்தினால் உமது தகப்பன் ஓர் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான். மூத்த குமாரன் கோபம் கொண்டவனாய் வீட்டினுள் பிரவேசிக்க மறுத்தான். அவன் தகப்பனோ உள்ளே வரும்படி அவனை வருந்தி அழைத்தான். அவனோ தகப்பனை நோக்கி, ''நான் இவ்வளவு காலமும் உமக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்திருக்கிறேன். இதுவரை நீர் எனக்கு எதைக் கொடுத்திருக்கிறீர்? எனது சிநேகிதரோடு மகிழ்ந்திருக்கும்படி ஓர் ஆட்டைக் கூடக்கொடுக்கவில்லையே. உமது ஆஸ்தியை விபசாரிகளோடே அழித்துவிட்டு வீடுதிரும்பிய இவனுக்கு ஓர் கொழுத்த கன்றை அடிப்பித்தீரே'' என்றான். அதற்கு அவன் தகப்பனோ, ''மகனே நீ என்னோடிருக்கிறாய், எனக்குரியவையாவும் உனக்குரியவை, ஆனால் உன் சகோதரனோ காணாமற் போனான், இப்பொழுது கண்டு பிடிக்கப் பட்டான், மரித்தான், மீண்டும் உயிர்த்தெழுந்தான், அவன் நிமித்தம் நாம் மகிழ்ச்சியடைய வேண்டுமல்லவா'' என்றான்.



லூக்கா 15:11-32,

**நீர் செய்ய வேண்டியது**

1. இடை வெளிகளை நிறப்புக.

இயேசு .................. சத்தியங்களை

விளங்கிக் கற்றுக் கொள்ளும்படியாக

சிறு......................ச் சொன்னார்.

## இக்கதையிலிருந்து பெறப்படும் படிப்பினைகள்

ஆஸ்திகள் இருவகையாகக் கொடுக்கப்படுவது வழக்கம். உறுதிமூலம் அல்லது சொந்தக்காரர் ஜீவிக்கும் வேளையில் கொடையாகக் கெடுக்கப்படுவது. இளைய குமாரன் சொந்த வழிகளிலே இன்புற்றிருக்கும்படி வீட்டை விட்டு வெளியே செல்லவிரும்பினான். அவன் தனது சினேகிதரைத் தெரிந்து கொள்ள விரும்பினான். தன் தகப்பனின் சகோதரனின் புத்திமதிகளை கேட்க விரும்பவில்லை ஆகவே தகப்பன் தன் ஆஸ்தியில் அவன் பங்கைக் கொடுத்ததும், அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டான்.



அவனிடத்தில் பணம் இருந்த வரை சினேகிதரும். இருந்தனர். பணம் முடிந்ததும் சினேகிதரும் மறைந்துவிட்டனர். கடைசியாக பசியில் பன்றியின் ஆகாரம் கூட தனக்குக் கிடைக்காத வேளையில் அவன் தனது புத்தியீனத்தை உணர்ந்தான். அவன் வீட்டிற்குச் சென்று தனது பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டான். தன் தகப்பன் தனக்கோர் வேலையையாகிலும் கொடுப்பார் என்று அவன் நம்பினான்

அவனது தகப்பன் அவனை வரவழைத்து அவனது குடும்பத்திலே மீண்டும் அவனுக்குரிய முந்திய இடத்தைக் கொடுத்த போது அது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது அவன் முந்திய இடத்தைப் பெறுவதற்குப் பாத்திரமற்றவனாயிருந்த வேளையிலும், அவனது தகப்பன் அவனின் பாவனிலையிலும் அவனை நேசித்து ஏற்றுக் கொண்டா.ன்

இவ்வுவமையில் தகப்பன் எமது பரம தகப்பனாகிய தேவனைக் காண்பிக்கிறார். புத்திரர் மாண்டு கிடக்கும் இருவகையான ஜனங்களைக் குறிக்கின்றனர். இளைய குமாரன் தனது பாவங்களை உணர்ந்து அவற்றிற்காக தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்கும் பாவிக்கு ஒப்பாயிருக்கிறான்.

மூத்த குமாரனோ தான் எவ்வளவு நல்லவன் என்பதைக் குறித்துப் பெருமை உள்ளவனாகவும் தனது சகோதரனைக் குறித்து வெட்கப்பட்டவனாகவும் காணப்படுகிறான். அவன் பேசிய வார்த்தைகளில் இருந்து உண்மையாய் அவன் தன் தகப்பனை நேசிக்க்வில்லை என்பதைக் காண்கிறோம். இதனால் அவன் வெளியூரிற்கு ஆஸ்திகளை அழிக்கச் சென்ற தன் சகேதரனைப் போன்று தன் இருதயத்திலே தகப்பனிடத்தில் இருந்து தூரமாய் இருந்தான் என்று காண்கிறோம். இம் மூத்த குமாரன், தங்களது நற்கிரியைகளை எண்ணி பெருமையாயிருந்து தங்களுக்கும் தேவனுடைய பாவ மன்னிப்புத் தேவை என்றுணராதிருக்கும் ஜனங்களுக்கு ஒப்பாய் இருக்கிறான். வெளியூரிற்குச் சென்ற குமாரனுடைய

பாவங்களை விட பெருமை குற்றங் கண்டு பிடித்தல், மன்னியாத தன்மை போன்ற பாவங்கள் மோச மானவை.

நாங்கள் யாவரும் எமது பரமபிதாவிற்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்திருக்கிறோம். பரலோகத்திற் பிரவேசிக்க நாம் தகுதியற்றவர்கள். ஆனால் தேவன் நாம் நமது பாவங்களை விட்டு அவரண்டை மன்னிப்பிற்கு வரவேண்டும் என்றெதிர் பார்க்கின்றார்.

> ஏனெனில் பாவத்தின் சம்பளம் மரணம், ஆனால் தேவனுடைய கிருபை வரமோ கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன். ரோமர் 6: 23

## நீர் செய்ய வேண்டியது

2. இளைய குமாரன் வீட்டை விட்டுச்சென்றது எதற்காக ?
   (a) நல்ல வேலை ஒன்றை பெற்றுக் கொள்ளும்படி
   (b) மனுஷருக்கு சேவை செய்யும்படி
   (c) தன்னுடைய விருப்பத்தின்படி செய்ய.

3. ஏன் அவன் வீட்டிற்குத் திரும்பி வந்தான்
   (a) இன்னும் பணம் கேட்கும்படி
   (b) தகப்பனிடத்தில் மன்னிப்புக் கேட்டு ஓர் வேலை தரும்படி கேட்பதற்காக
   (c) வெளியூரைப் பற்றி சொல்லும்படி

4. தேவனுடைய மன்னிப்பு யாருக்குத் தேவை?
   (a) எல்லோருக்கும் — ஏனெனில் எல்லோரும் பாவிகள்.
   (b) மிகப் பொல்லாதவர்களுக்கு மட்டும்.
   (c) பட்டணத்தில் ஜீவிப்பவர்களுக்கு மட்டும்.

5. ரோமர் 6: 23.ஐ மனப்பாடம் செய்யவும்

6. நீர் பாவம் செய்திருக்கிறீரா? உமக்குத் தேவனுடைய மன்னிப்புத் தேவையா?

7. இதை மனப்பாடம் செய்யவும்
   ''தகப்பனே, நான் தேவனுக்கெதிராகப் பாவம் செய்தேன். இனிமேல் உமது குமாரன் என்றழைக்கப்பட நான் தகுதி யற்றவன்.'' இளைய குமாரன் செய்த இந்த ஜெபத்தை நீர் உமதாக்கிக் கொள்ள முடியும். நீர் எதைச் செய்திருந்தாலும், தேவன் உம்மை நேசிப்பதினால் உம்மை மன்னித்து, தமது வீட்டிற்குள் வரவழைப்பார்.

## நாம் மன்னிக்க வேண்டும்.

இயேசு சொன்னார் நாம் தேவனிடத்திலிருந்து மன்னிப்பைப்பெற வேண்டுமானால், நமக்கு விரோதமாய் தீங்கு செய்தோரை நாம் மன்னிக்க வேண்டும். மன்னியாத்தன்மை, கசப்பு, குற்றம் காணல் வெறுப்பு, சண்டையிடுதல், கொலை போன்ற பாவங்களைப் பிறப்பிக்கும். நாம் நமது பாவங்களைத் தழுவிக் கொண்டிருக்கும் வரை அவற்றிலிருந்து மன்னிப்பைப்பெற முடியாது. தேவன் அவற்றை எம்மிடமிருந்து எடுத்துவிட நாம் இடம் கொடுக்க வேண்டும் இயேசு சொன்னார்.

> ''நீங்கள் மனுஷருடைய தப்பிதங்களை அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.' மத்தேயு 6:15.

### நீர் செய்ய வேண்டியது

8. யாராவது உமக்குத் தீங்கு செய்ததுண்டா? அதை மன்னித்து மறந்துவிட தேவனிடம் உதவியைக் கேள்.

## இயேசு பாவிகளை மன்னிக்கிறார்

இயேசு இவ்வுலகிற்கு இரண்டு காரியங்களுக்காக வந்தார்.

1. தேவனையும், அவரது அன்பையும் குறித்து நமக்குக் கற்பிக்கும்படி.
2. நாம் மன்னிப்பு பெறும்படி, எமது குற்றங்கள் பாவங்கள் சுமந்து எமக்காக மரிக்கும்படி.



இயேசு சகலருடைய பாவங்களுக்காகவும், மரிக்கவிருந்த படியால் அவரிடம் மன்னிப்புக்கேட்ட சகலருக்கும் அவர் மன்னிப்புக் கொடுக்கக் கூடியவராக இருந்தார். இயேசு அனேக பாவிகளை மன்னித்து அவர்களுடைய ஜீவியத்தை முற்றுக மாற்றினார். ஒரு முறை பாவத்தில் ஜீவித்த ஓர் பெண் இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்டு அவருக்குத் தனது நன்றியைக் காண்பிக்க விரும்பினாள். இயேசுவும், சீஷரும் சீமோனுடைய வீட்டில் பந்தியிருந்த போது அவள் அங்கு போனாள். தனது பாவங்களுக்காக அவள் இயேசுவின் பாதத்தில் கண்ணீர் விட்டாள். இப்படிப்பட்ட பொல்லாத நடத்தையுள்ள ஓர் பெண் தன் பாதங்களைத் தொட இயேசு கொடுத்ததைக் குறித்து சீமோன் ஆச்சரியப்பட்டான். இயேசு அவனை நோக்கி ''ஒருவனிடத்தில் இரண்டு பேர் கடன் பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக் காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்க

வேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாத போது இருவருக்கும் கடனை மன்னித்து விட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல்'' என்றார் சீமோன் பிரதியுத்தமாக: ''எவனுக்கு அதிகமாய் மன்னித்து விட்டானோ,அவனே அதிக அன்பாயிருப்பான், என்று நினைக்கிறேன்'' என்றான். அதற்கு இயேசு, ''சரியாய் நிதானித்தாய் என்றார். ஸ்திரியினிடமாய் திரும்பி சீமோனை நோக்கி: இந்த ஸ்திரியைப் பார்க்கிறாயே நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்தாள். அவள் காண்பித்த பெரிய அன்பிலிருந்து அவளது திரளான பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்று காண்கிறோம். குறைந்தளவு மன்னிப்பைப் பெற்றவன் சிறிதளவு அன்பையே காண்பிப்பான்.'' என்றார். பின்பு அவளை நோக்கி, ''உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது'' என்றார். அவரோடு கூடப் பந்தியிருந்தவர்கள் பாவங்களை மன்னிக்க இவர் யார் என்று தங்களுக்குள் ஆலோசனை செய்தனர். இயேசு மீண்டும் அவளை நோக்கி ''உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ'' என்றார்.
லூக்கா 7:41-50.

இயேசு மன்னித்த வேளையில் அவள் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தாள். பரிசேயனும், அவன் சிநேகிதர்களும் இதே மன்னிப்பையும். மகிழ்ச்சியையும் அனுபவிக்கக்கூடிய வாய்ப்பிருந்தது. ஆனால் அவர்கள் தாங்கள் பாவிகள் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களைக் குறித்தும், தங்கள் நற்கிரியைகளைக் குறித்தும் பெருமையாயிந்தனர்.



பரிசேயர் கேட்டனர், ''பாவங்களை மன்னிக்கின்ற இவர் யார்?'' பாவங்களை மன்னிக்கிறவர் யார்? தேவ குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவர் இன்னும் தன்னிடத்தில் வருபவாகளை மன்னிக்கிறார். நாம் ஜெபிக்கும் போது எமது பாவங்களை அவரண்டையில் அறிக்கையிட்டு மன்னிக் கும்படி கேட்டு நாம் உண்மையாகப் பாவத்திலிருந்து விலகி ஜீவிக்கத் தீர்மானித்தால் ''உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது, உன் விசுவாசம் உன்னை இரட் சித்தது, சமாதானத்தோடே போ'' என்று அவர் சொல்வதை எம் இருதயங்களில் நாம் உணர முடியும் இயேசுவின் மன்னிப்பு நமக்கு சந்தோஷம் சமாதானத்துடன் புது ஜீவியத்தையும் கொண்டு வருகின்றது

இல்லா விட்டால் பரிசேயனைப் போன்று நாம் பாவிகளல்ல என்று நடிக்கக் கூடும்.இப்படி நாம் செய்கின்ற பொழுது இயேசுவின் மன்னிப்பை எமது ஜீவியத்தில் அனுபவிக்க முடியாது. எமது பாவங்களிலிருந்து மன்னிப்பை பெறும்படி நாம் அவற்றை இயேசுவுக்கு அறிக்கையிட வேண்டும். நாம் நித்திய ஜீவனைப் பெற வேண்டுமானால் பாவ மன்னிப்பைப் பெறுவது அவசியம்.

## நீர் செய்ய வேண்டியது

9. "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ" என்ற இயேசுவின் வார்த்தையை மனப்பாடம் செய்க.

10. இயேசு உனது பாவங்களை மன்னித்திருக்கிறாரா? ............ அதற்காக அவரைத் துதிக்கவும். இயேசுவின் மேல் எனக்கிருக்கும் அன்பைக் காண்பிக்கும்படி நான் என்ன செய்கிறேன் ?

## வாழ்த்துக்கள்

இப்பாடத்தின் மூன்றில் இரண்டு பங்கை நீர் முடித்து விட்டீர். கீழே உள்ள விலாசத்திற்கு இதை அனுப்பி வைக்கவும். நாம் இதைப் புள்ளியிட்டு ஐந்தாம் பாகத்துடன் உமக்கு அனுப்பிவைப்போம்.

உமது பெயர் ..................................

விலாசம் ..................................

..................................

வயது ..................................

சமயம் ..................................


ICI Nearest Centre
ICI UNIVERSITY
1ST FLOOR, 1/62/14 RAVI COLONY, ST. THOMAS MOUNT, CHENNAI - 600016
PHONE : +91-44-4351 9774
Email : iciuniversitymdrs@gmail.com